# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

ஆணை நாள் **15.07.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 15663/SCIC/2024**

திரு M. நாராயணமூர்த்தி — மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ....... பொதுஅதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்,
உத்திரமேரூர்,
காஞ்சிபுரம் 603 406

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 05.09.2024 |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 10.10.2024 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 02.12.2024 |
| 4. | மனுதாரரின் ஆட்சேபனை கடிதம் | 23.01.2026 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், உத்திரமேரூர் என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 05.09.2024 தேதியிட்டு அனுப்பிய மனுவில் ஓ,மு எண்கள், நி.மு.எண்கள், மு.மு.எண்கள் மற்றும் ந.க.எண்கள் சிலவற்றைக்கு குறிப்பிட்டு அதன் தொடர்பான ஆவணங்களைப் பார்வையிட்டு நகல்கள் பெறுவதற்கு அனுமதி வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தன்னால் இன்றைய விசாரணைக்கு ஆஜராக இயலவில்லையென்று தெரிவித்து 08.07.2026 தேதியிட்டு ஆணையத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி ராணி, பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், உத்திரமேரூர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. மனுதாரர் 5 ஆவண எண்களைக் குறிப்பிட்டு அதற்கான நகல்களை சட்டப்பிரிவு 2(j)ன் கீழ் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்குமாறு கோரியுள்ளார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர் 27.01.2026 தேதியிட்டு சில ஆவண நகல்கள் மனுதாரருக்கு அனுப்பப்பட்டதாகவும், ஆனால் தற்போது வரையில் மனுதாரர் ஆவணங்களை சட்டப்பிரிவு 2(j)ன் கீழ் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லையென்றும் தெரிவித்தார்.

4. எனவே, **பொதுத் தகவல் அலுவலர் உடனடியாக மனுதாரர் கோரிய ஆவணங்களை 22.07.2026 அன்று அலுவலகத்திற்கு நேரில் வந்து பார்வையிடுமாறு தெரிவித்து மனுதாரருக்கு கடிதம் அனுப்புமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. அவ்வாறு மேற்படி தேதியில் மனுதாரர் தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அலுவலகத்திற்கு நேரில் வரஇயலவில்லையெனில் வேறொரு தேதியினை குறிப்பிட்டு அவருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்குமாறும் ஆணையத்தால் பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. மேலும், மனுதாரர் கோரிய ஆவணங்களை சட்டப்பிரிவு 2(j)ன் கீழ் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கிய விவரம் குறித்த அறிக்கையினை 31.08.2026 தேதிக்குள் ஆணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 15663/SCIC/2024</u>**

பெறுநர்
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
உத்திரமேரூர்,
செங்கல்பட்டு மாவட்டம்.

**மனுதாரர்**

திரு M. நாராயணமூர்த்தி,
த/பெ M முருகன்,
1/92, மெயின்ரோடு, காரணைமண்டபம்,
R.N. கண்டிகை அஞ்சல்,
மானாம்பதி, உத்திரமேரூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

TK/PS